
பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 27 செவ்வாய்க்கிழமை 10.06.2025 | அதிர்வு 311

## ரணில் நாளை சி.ஐ.டியில் ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை புதன்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார் 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### பொலிஸாரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்

# தையிட்டியில் தொடரும் போராட்டம்



### தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ். தையிட்டியில் இன்றும் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்ற நிலையில் அங்கு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் உள்ள திஸ்ஸ விகாரையானது சட்டவிரோதமான முறையில் அமைக்கப் பட்டுள்ளது எனத் தெரிவித்து அந்தப் பகுதியில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் போராட்டம் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

அந்தவகையில், பொசன் போயா தினமான இன்றும் அங்கு போராட்டம் முன்னெடுக் கப்படுகின்றது. 02▶




உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# ரணில் - மனோ அணி சந்திப்பு!



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக் குழுவினருக்கும் இடையில் இன்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பெயரில் அவரது ஃப்ளவர் வீதி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஒத்துழைப்பது பற்றி உரையாடல் இடம்பெற்றது என்று கூட்டணி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க நாளை ரஷ்யா செல்லவுள்ளதால் இந்தச் சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்று கூறிய கூட்டணி தரப்பு, உள்ளூராட்சி மன்ற விவகாரம் தவிர்த்த ஏனைய விடயங்கள் உரையாடப்பட்டனவா என்ற கேள்விக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணில் நாளை...**

எனத் தெரியவருகின்றது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் முறைப்பாட்டுடன் தொடர்புடைய மருந்து இறக்குமதி விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே ரணில் விக்கிரமசிங்க சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

**தையிட்டியில்...**

போராட்ட இடத்துக்குச் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று காலை முதல் அந்த இடத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டாலும் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு தென்னிலங்கையில் இருந்து பெருமளவான சிங்கள மக்கள் பஸ்களில் அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















### மோட்டார் சைக்கிளில்

# வற்றாப்பளைக்குச் சென்று வீடு திரும்பிய இளைஞர் வாய்க்காலினுள் வீழ்ந்து மரணம்

முல்லைத்தீவு, வற்றாப்பளை ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்குச் சென்று வீடு திரும்பிய இளைஞர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மேற்படி இளைஞர், ஒட்டுசுட்டான் – மாங்குளம் வீதியில் ஒலுமடு பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வாய்க்காலினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நித்திரை காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# ஈச்சிலம்பற்றில் யானை தாக்கி ஆண் ஒருவர் பரிதாப மரணம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, ஈச்சிலம்பற்றில் இன்று காலை காட்டு யானை தாக்கி ஆண் ஒருவர் சாவடைந்துள்ளார்.

மாடு பார்க்கச் சென்ற ஈச்சிலம்பற்று, பூநகர் பகுதியைச் சேர்ந்த இராசையா கணேசன் (வயது 55) என்பவரே யானை தாக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

### பொசன் பூரணை தினத்தையொட்டி

# வவுனியாவில் 22 இடங்களில் இன்று தானசாலை வழங்கல்



(கி.வசந்தன்)

பௌத்த மக்களின் விசேட தினமான பொசன் பூரணை தினத்தையொட்டி வவுனியாவில் இன்று 22 இடங்களில் தானசாலை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன், பெருமளவான மக்கள் அதனை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம், வனவளத் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம், இராணுவத்தின் 56 ஆவது படைப் பிரிவு, தொலைத்தொடர்பு திணைக்களம் உள்ளிட்ட 22 இடங்களில் தானசாலை வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது குளிர்பானம், ஐஸ்கிறீம், கடலை, பாணும் சம்பலும், புரியாணி, சோறு கறி எனப் பல்வேறு உணவுப் பண்டங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

விசேட நிகழ்வாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் 3 ஆயிரத்து பேருக்குப் பிரியாணி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில மதத்தலைவர்கள், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜயமுனி சோமரத்ன, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் அதிகாரிகள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமுதாயப் பொலிஸ் குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அதனைப் பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.



# புங்குடுதீவில் கரையொதுங்கிய திமிங்கலம்!

யாழ்ப்பாணம், புங்குடுதீவு கடலில் திமிங்கிலம் ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புங்குடிதீவு கடற்கரையில் 15 அடி நீளமுள்ள இந்தத் திமிங்கலம் இறந்த நிலையில் கரையொதுங்கியது.

இந்தத் திமிங்கிலம் உயிரிழந்தமைக்கான காரணம் தெரியவராத நிலையில் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடி - தியாவட்டுவானில் வாகன விபத்தில் 12 பேர் காயம்!









**(அபு அலா, மட்டு.துஷாரா, தன்.ஜெபி ஜனார்த்)**

ஓட்டமாவடி, தியாவட்டுவான் பகுதியில் இன்று (10) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை பகுதியைச்சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் விமான நிலையத்துக்குச் சென்று திரும்பி வரும் வழியிலயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி தியாவட்டுவான் அறபா வித்தியாலயத்துக்கு முன்பாக இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

வானில் பயணித்த 4 பெண்கள், 2 குழந்தைகள் உள்ளடங்களாக மொத்தம் 12 பேர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரனைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளராக புவனேந்திரன்!

**(அபு அலா)**

திருகோணமலை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த செ.புவனேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை உடன் செயற்படும்வண்ணம் நேற்று (09) கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வித் திணைகளத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக (நிருவாகம்) பதவி வகிக்கும் நிலையில், அந்தப் பதவிக்கு மேலதிகமாக பதில் கடமை அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பரவும் சுவாச நோய்கள்

சுவாச நோய்ப் பாதிப்பு அதிகரித்து வருகின்றமை குறித்து மருத்துவத் துறையின் இரண்டு தரப்புகளில் இருந்து முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

சமூகத்திற்குள் சுவாச நோய்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவது குறித்து அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று பொது மக்களை எச்சரித்தது. குறிப்பாக பெரிய கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது அல்லது பலருடன் தொடர்பு கொள்ளும்போது முகக்கவசங்களை அணியுமாறு மக்களை அது வலியுறுத்தயுள்ளது.

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் டாக்டர் சமில் விஜேசிங்க, ஓர் ஊடக சந்திப்பில் உரையாற்றுகையில், வழக்கமான கை கழுவுதல் மற்றும் நல்ல சுவாச சுகாதாரத்தைப் பராமரித்தல் உள்ளிட்ட அடிப்படை கொவிட் சுகாதார வழிகாட்டுதல்களையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

அதேசமயம் நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாச நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானம் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானதென அவர் தெரிவித்துள்ளார்.

சுவாச நோய்கள் தொடர்பில் முதியோர், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள், நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட தரப்பினர் விசேட கவனம் செலுத்த வேண்டுமென விசேட வைத்திய நிபுணர் அத்துல லியனபத்திரன தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் சுவாசத் தொற்றுகளுக்கு உள்ளாகும்போது உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்டை நாடான இந்தியாவில் சமீபத்தில் கொவிட் தொற்றுகளின் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. இது அங்குள்ள சுகாதார அதிகாரிகளை பி.ஸி.ஆர். சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிட தூண்டியுள்ளமை தெரிந்ததே.

தற்போது உள்ளூரில் ஒரு பெரிய தொற்றுநோய்க்கான குறிப்பிடத்தக்க ஆபத்து இல்லை என்று டாக்டர் சமில் விஜேசிங்க உறுதியளித்தாலும், விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

“பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தற்போது, எந்த ஆபத்தான சூழ்நிலையும் இல்லை, ஆனால் தடுப்பு நடவடிக்கைகள் எப்போதும் அறிவுறுத்தப்படுகின்றன” என்கிறார் அவர்.

கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் மற்றும் நாள்பட்ட சுகாதார நிலைமைகள் உள்ளவர்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது. ஏனெனில் அவர்கள் சுவாச நோய்த்தொற்றுளால் ஏற்படும் சிக்கல்களுக்கு அதிக ஆபத்தில் உள்ளனர் என்றும் கூறப்பட்டது.

வரமுன் காப்பது எப்போதும் நல்லது. எச்சரிக்கையாக இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக முற்றோதல்!



சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசி மாதத் திருவாசகம் முற்றோதல் இன்று நடைபெற்றது.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# சிலம்பக் கலை மாணவர்களுக்கான தரப்பட்டி மற்றும் சான்றிதழ் வழங்கல்!

'பாபு இஷின் றை யூ' கராத்தே பயிற்சிப் பாடசாலையில் சிலம்பக் கலை பயிலும் மாணவர்களுக்கான தரப் பட்டி மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நவாலி மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் 'பாபு இஷின் றை யூ' கராத்தே பயிற்சிப் பாடசாலையின் அதிபரும் சிவலீமன் சிலம்பக் குழுமத்தின் ஸ்தாபகருமான எஸ். யசோதரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தமது பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டு. உறுப்பினர் சத்தியப் பிரமாணம்!





(பழுவூரான்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமான நிகழ்வு இன்று (10) மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் உரிமைகளும், அவர்களின் பொறுப்புக்களும், பொது மக்களுக்கான கடமைகளை முன்னெடுத்தலும் தொடர்பான விளக்க உரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய சத்தியப் பிரமாண நிகழ்வும் கட்சியின் சத்திய பிரமாண நிகழ்வும் இடம்பெற்றன. வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 உள்ளூராட்சி சபைகளிலும் வெற்றி பெற்ற 84 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன், வைத்தியர் இ. ஸ்ரீநாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளருக்கு அங்கிகள் வழங்கல்!













(அபு அலா)


ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு புரவலர் ஹாஷிம் உமர் பவுண்டேசன் அமைப்பால், நாடளாவிய ரீதியிலுள்ள ஊடக அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டன. இதற்கு அமைய இம்பே–ாட் மிரர் ஊடக அமைப்புக்குக் கிடைக்கப்பெற்ற நிதி உதவியில் இம்போட் மிரர் ஊடக அமைப்பின் அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்போட் மிரர் ஊடக அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.எல். முனாஸின் வழிகாட்டலின் கீழ், அதன் முகாமையாளர் எம்.வை.அமீர் தலைமையில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பிரிவின் பீடாதிபதி போராசிரியர் எம்.எம். பாசில் பிரதம அதிதியாகவும், உலமாக் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீட் மற்றும் ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.ஏ.சத்தார் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கான அங்கிகளை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில், இம்போட் மிரர் ஊடக அமைப்பின் ஸ்பாக உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேர்!







சாவகச்சேரி, நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி அருள்மிகு வீர கத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த தேர்த் திருவிழா நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.





# ஆவரங்கால் ஞானவைரவர் தீர்த்தம்!




ஆவரங்கால், சர்வோதய வீதி திருவருள்மிகு ஞானவைரவர் சுவாமி திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் பதினொரு தினங்கள் நடைபெற்றது.

பதினோராம் நாளான நேற்று (09) தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.









# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் அமுத விழாக் கால பட்டத் திருவிழா

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு அமுத விழா நிறைவை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் மன்றம் முதன் முதலாகப் பட்டத் திருவிழாவை செம்மணி வயல் வெளியில் நடத்தியது.

பெரும் எண்ணிக்கையான பட்டங்கள் போட்டியில் கலந்து கொண்டன.

பட்டத்திருவிழாவில் கலந்து கொண்ட அனைத்து போட்டியாளர்களுக்கும் அவர்களின் முயற்சிக்கும் நல்லூர் சங்கிலியன் மன்றம் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளது.





















# கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி சிவகாமி அம்பாள் மஞ்சம் வெள்ளோட்டம்



கோண்டாவில், ஈழத்து தில்லையம் பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக் கோயில் மஞ்சம் வெள்ளோட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்று, பின்னர் இரவு மஞ்சத்திருவிழா இடம் பெற்றது.

கோண்டாவில் ஈழத்து தில்லையம் பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக் கோயில் வருடாந்தத் திருவிழாவின் ஐந்தாம் திருவிழாவான கடந்த செவ் வாய்க்கிழமை மஞ்சத்திருவிழா நடை பெற்றது.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இந்த மஞ்சம வடிவமைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















# பேருவளை பொலிஸார் மீது தாக்குதல்; பொலிஸ் அதிகாரியுடன் மூவர் காயம்!

பேருவளை பகுதியில் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பேருவளை பொலிஸ் குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட மூன்று பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்து நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை மீன்பிடி துறைமுகத்துக்கு அருகில் கொடிகளை ஏற்றிக் கொண்டிருந்த ஒரு குழுவினருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

லொறி ஒன்றில் காணப்பட்ட குழுவினரிடம், வீதியை மறிக்க வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தினர். இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் வன்முறையாக மாறியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் காற்றாலை, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக நாளை மாபெரும் கவனவீர்ப்புக்கு ஏற்பாடு!

## அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு பிரஜைகள் குழு கோரிக்கை

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)




மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப் பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய வற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகை யில் நாளை புதன்கிழமை (11) கவன வீர்ப்பு பேரணி ஒன்று மன்னாரில் இடம் பெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவை வழங்குமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலை வர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் இன்று செவ்வாய்க்கிழமை (10) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தி மக்க ளுக்கு நன்மையை ஏற்படுத்தும் செயல் திட்டமாக காணப்பட்டாலும்,குறித்த காற்றாலைகள் அமைக்கப்படும் இடம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகை யில் அமைந்துள்ளது.

மன்னார் தீவு மற்றும் பெருநிலப் பரப்பிலும் கனிய மணல் அகழ்வு நடவ டிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்ற போதும், குறித்த நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

எனவே மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய வற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகை யில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புகள் உள்ளடங்களாக சிவில் அமைப்புக் கள் இணைந்து நாளை புதன்கிழமை காலை மன்னாரில் கவனவீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் ஆரம்ப மாகி பிரதான வீதியூடாக மன்னார் நகரைச் சென்றடையும்.

அதனை தொடர்ந்து ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் வழங்கி வைக்கப்படும்.

குறித்த பேரணியில் மன்னார் மாவட்ட மக்கள், வர்த்தகர்கள் உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது இருப்பை தக்க வைக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.- என்றார்.



# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச வர்த்தகக் கண்காட்சி!



(அபு அலா)

சிறுகைத்தொழில் முயற்சியாளர் களின் உற்பத்திகளை ஊக்குவித்து அவர்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அட்டா ளைச்சேனை பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச செயலக வர்த்தக கண்காட்சி - 2025 அட்டா ளைச்சேனை கடற்கரை பூங்காவில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலா ளர் ஏ.சீ.அஹமட் அப்கர் தலைமையில் இடம்பெற்ற இந்த வர்த்தக கண்காட் சிக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேய விக்ரம கலந்துகொண்டு இதனை திறந்து வைத்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் நஸீல், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப் பாளர் எச்.ஏ.அனீஸ் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் எம்.எல்.ஏக்கள், ஓய்வுபெற்ற நீதிபதி விஜய் முன்னிலையில் கட்சியில் இணைந்தனர்



முன்னாள் எம்.எல்.ஏக்கள், ஐ.ஆர்.எஸ் அதிகாரி, ஓய்வுபெற்ற நீதிபதி உள்ளிட்டோர் விஜய் முன்னிலையில் த.வெ.கவில் இணைந்தனர்.

தமிழ் திரையுலகின் உச்ச நடிகரான விஜய், தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) என்ற அரசியல் கட்சியை தொடங்கி, தி.மு.கவையும் பா.ஜ.கவையும் கடும் விமர்சனம் செய்து வருகிறார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு பல்வேறு வியூகங்களை வகுக்கும் முயற்சியில் விஜய் ஈடுபட்டுள்ளார். பூத் கொமிட்டி மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்தும் பணிகளை தவெக தீவிரப்படுத்தியுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி விஜய் பிறந்த நாளை நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும் தனது பிறந்தநாளின்போது, முக்கிய அறிவிப்புகளையும் வெளியிட விஜய் திட்டமிட்டுள்ளார். அப்போது, 42 நாள்கள் சுற்றுப்பயணம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் மாற்று கட்சியில் இருந்து விலகியவர்களை த.வெ.கவில் சேர்க்கும் முயற்சியும் நடந்து வருகிறது.

இந்நிலையில், வருமானவரித் துறை அதிகாரியாக இருந்து விருப்ப ஓய்வுபெற்ற அருண்ராஜ் நேற்று த.வெ.கவில் இணைந்தார். அதேபோல், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ ராஜலட்சுமி, தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. டேவிட் செல்வன், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏவும், திராவிட முற்போக்கு மக்கள் கட்சி நிறுவனருமான ஸ்ரீதரன், ஜேப்பியார் ரெமிபாய் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மரிய வில்சன், ஓய்வுபெற்ற நீதிபதி சி.சுபாஷ் ஆகியோரும் கட்சியில் தங்களை நேற்று இணைத்துக் கொண்டனர்.

பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்துக்கு வந்த அவர்களை விஜய் வரவேற்று சால்வை அணிவித்தார். த.வெ.கவில் இணைந்த வருமானவரித் துறை அதிகாரி அருண்ராஜுக்கு கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

த.வெ.கவில் வெற்றிடமாகவுள்ள 6 மாவட்டங்களுக்கு புதிய செயலாளர்களையும் ஒன்றிய, வட்ட, பகுதியில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கும் புதிய நிர்வாகிகளை விஜய் அறிவித்துள்ளார்.

# மாநிலங்களவை தேர்தலுக்கு 13 பேர் வேட்புமனு தாக்கல்



தமிழகத்தில் மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்றுடன் நிறைவு பெற்ற நிலையில், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 6 பேர் மற்றும் சுயேச்சைகள் 7 பேர் என 13 பேர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட, வைகோ, பி.வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகிய 6 பேரின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, அந்த 6 இடங்களுக்கான தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தமிழக சட்டப்பேரவையில், எம்.எல்.ஏக்கள் பலம் அடிப்படையில் 6 இடங்களில் 4 தி.மு.கவுக்கும், இரண்டு அ.தி.மு.கவுக்கும் கிடைக்கும். அதன் அடிப்படையில், தி.மு.க. சார்பில் 4 இடங்களுக்கு மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன், பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகியோர் அறிவிக்கப்பட்டனர். அ.தி.மு.க. சார்பில், தனபால் மற்றும் ஐ.எஸ். இன்பதுரை ஆகியோர் அறிவிக்கப் பட்டனர்.

இதற்கிடையில், தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புப்படி, கடந்த ஜூன் 2 ஆம் ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் தொடங்கியது. முதல் நாளில், பத்மராஜன், கண்டே சயன்னா ஆகிய சுயேச்சைகள் மனுத்தாக்கல் செய்தனர். அதன்பின் கடந்த ஜூன் 6 ஆம் திகதி, தி.மு.க. வேட்பாளர்களான மக்கள் நீதிமய்ய தலைவர் கமல்ஹாசன், தி.மு.கவைச் சேர்ந்த பி.வில்சன், கவிஞர் சல்மா என்ற ராஜாத்தி, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் மனுத் தாக்கல் செய்தனர்.

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வந்தால் நல்லது; பிரேமலதா



2026 இல் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வந்தால் நல்லது. அப்போது தான் தவறு நடந்தால், ஒரு எதிர்க்கட்சியாக சுட்டிக்காட்ட முடியும் என தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

இதுதொடர்பில் கரூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விஜயகாந்த் மீதான இரங்கல் தீர்மானத்துக்கு நாங்கள் வரவேற்பு அளித்தது அரசியல் நாகரிகம். 2 நாள்களில் கூட்டம் நடத்தப்பட்டு 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் தே.மு.தி.க. பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.கவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் ஆசனம் வழங்குவது என்பது ஏற்கெனவே எழுத்துப்பூர்வமாக முடிவு செய்யப்பட்ட ஒன்று. ஆனால், அதில் எந்த ஆண்டு என்பதை குறிப்பிடவில்லை. இந்த விஷயத்தில் எழுத்துப்பூர்வமாக எழுதிக் கொடுப்பதை விட, தனது வாக்குறுதி தான் முக்கியம் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி எங்களிடம் தெரிவித்துள்ளார். 2026 ஆம் ஆண்டில் தே.மு.தி.கவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் ஆசனம் உறுதி செய்யப் பட்டுள்ளது.

விஜய் கட்சியுடன் கூட்டணியா என்ற கேள்வியை நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும். அதற்கு அவர் தான் பதில் சொல்ல வேண்டும். 2026 இல் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி வந்தால் நல்லதுதான். அப்போதுதான் தவறு நடந்தால், ஒரு எதிர்க்கட்சியாக சுட்டிக்காட்ட முடியும்.

கரூர் மாவட்டத்தில் மணல் கொள்ளை, 24 மணிநேரம் மது விற்பனை, கள்ள லாட்டரி விற்பனை, கனிமவளக் கொள்ளை அதிகமாக நடக்கிறது. இதை முதல்வர் சரி செய்ய வேண்டும். தனியாக வசிக்கும் முதியோர்களுக்கு பாதுகாப்பு இல்லை. கொள்ளை சம்பவம் அதிகரித்துள்ளது.

## லொஸ் ஏஞ்சலிஸில் போராட்டம்:

# தேசிய பாதுகாப்பு படையினருக்கு உதவ 700 கடற்படையினர் அனுப்பி வைப்பு










குடியேற்றச் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்புப் படையினருக்கு உதவுவதற்காக சுமார் 700 கடற்படையினர் அனுப்பப்பட்டுள்ளனர் என பென்டகன் உறுதிப்படுத்தியுள்ளது.

அங்கு தேசிய பாதுகாப்புப் படையை அனுப்பும் தமது முடிவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆதரித்துள்ளார்.

எனினும் கலிபோர்னியாவின் ஆளுநர் இந்த நடவடிக்கைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குடியேற்ற சுங்க அமுலாக்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் லொஸ் ஏஞ்சலிஸில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் அங்கு சுமார் 2000 தேசிய பாதுகாப்புப் படையினரை டொனால்ட் ட்ரம்ப் அனுப்பியுள்ளமை அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் உள்ளூர் பொலிஸாரின் ஊடாக போராட்டங்களைக் கையாள முடியும் என லொஸ் ஏஞ்சலிஸ் நகரமுதல்வர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுச் சட்ட அமுலாக்கத்தின் போது இராணுவத்தினரைப் பயன்படுத்துவது அசாதாரணமான விடயமெனச் சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.





# ரஷ்யா - உக்ரைன் இடையே பணயக் கைதிகள் பரிமாற்றம்

ரஷ்யாவும், உக்ரைனும் நேற்று பணயக் கைதிகளைப் பரிமாறிக் கொண்டுள்ளன.

25 வயதிற்கு உட்பட்ட கைதிகளை இரு நாடுகளும் பரிமாறிக் கொண்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கிய நகரான இஸ்தான்புல்லில் கடந்த 2 ஆம் திகதி இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற நேரடிப் பேச்சுவார்த்தைகளை அடுத்து இது சாத்தியமாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்ததன் பின்னர், மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட கைதிகள் பரிமாற்ற தொடரின் முதல்படி என இது விபரிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் உடன்படிக்கைக்கு அமைய, இரு தரப்பினரையும் சேர்ந்த 1,200 பணயக் கைதிகளை பரிமாற்றவும், யுத்தத்தின் போது மரணமானவர்களின் சடலங்களைக் கையளிக்கவும் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையேயான யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டு வரும் செயல்பாடு, தற்போது முடிவுக்கு வரும் சாத்தியம் இல்லை என போரியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 10/06/2025

## ஒன்டாரியோவில் படகு விபத்து

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள கவார்த்தா லேக்ஸ் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் 02

# அமெரிக்காவை நம்பியிருக்க முடியாது; பாதுகாப்பு செலவை அதிகரிக்கும் கனடா

**பாதுகாப்பு துறையில் அமெரிக்காவைச் சார்ந்திருக்கும் நிலையை மாற்றும் வகையில், கனடா பிரதமர் மார்க் கார்னி புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.**

**இதுதொடர்பில் இவர், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பேசும்போது,**

**"இன்று உலகம் அபாயகரமானதும் பிரிக்கப்பட்டதுமான நிலைமைக்கு சென்றுள்ளது. கனடா தனது பாதுகாப்பை தானாகவே நிலைநிறுத்தக்கூடியதாக மாற வேண்டும்." எனக் கூறினார்.**

**நேட்டோ அமைப்பின் 2 சதவீத பாதுகாப்பு செலவுத் திறனைக் கடந்த ஆண்டுகளில்**



**எட்ட முடியாத நிலையில் இருந்த கனடா, இந்த நிதியாண்டுக்குள் அந்த இலக்கை எட்டும் என உறுதிப்படுத்தியுள்ளார்.**

தற்போது கானடா தனது GDP-யின் 1.45 சதவீதம் மட்டுமே பாதுகாப்பு செலவுக்கு ஒதுக்கி வருகிறது.

முக்கியமாக, கனடா அமெரிக்காவிடம் இருந்து அதிகளவில் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வந்தது.

ஆனால் தற்போதைய சூழலில், அமெரிக்காவின் பொருளாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ட்ரம்ப் அரசின் விதிகளால் பாதிக்கப்பட்ட பிறகு, "கனடாவின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலிகளுக்கு முன்னுரிமை அளிப்பது உட்பட ஒவ்வொரு டொலரும் புத்திசாலித்தனமாக முதலீடு செய்யப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்." என கார்னி தெரிவித்தார்.

அர்க்டிக் பகுதியில் பலதேசங்களுடன் இணைந்து நடத்திய இராணுவ பயிற்சிகள், கனடாவின் வளங்கள் குறைந்த நிலையை வெளிக்கொணர்ந்துள்ளன. அதில், நான்கு நீர்மூழ்கி கப்பல்களில் ஒன்று மட்டுமே இயங்கக்கூடிய நிலையில் உள்ளது என்றார்.

இந்நிலையில், பாதுகாப்பு மேம்பாட்டிற்கான இந்த நடவடிக்கைகள், வரவிருக்கும் ஜி 7 உச்சி மாநாட்டிலும் முக்கியப் பொருளாக அமையும்.

# குடும்பத்தை கொலை செய்த குற்றவாளி மேல்முறையீடு

கனடாவில், நடைபாதையில் நடந்து சென்றுகொண்டிருந்த குடும்பத்தின்மீது வேண்டுமென்றே வானை மோதிக் கொன்ற குற்றவாளி, தனக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார்.

2022ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 6 ஆம் திகதி, கனடாவின் ஒன்றாறியோவிலுள்ள லண்டன் பகுதியில், சல்மான் அஃப்சால் (வயது 46), அவரது மனைவி மதிகா சல்மான் (வயது 44), தம்பதியரின் மகள் யும்னா சல்மான் (வயது 15), மகன் ஃபயெஸ் அஃப்சால் (வயது 9), மற்றும் அஃப்சாலின் தாயார் ஆகியோர் நடைபாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

அப்போது, நத்தானியேல் (வயது 20) என்ற நபர் வேண்டுமென்றே தனது வானைக்கொண்டு அவர்கள் மீது மோதினார்.

வான் மோதியதில், சல்மான் அஃப்சால், அவரது மனைவி மதிகா, மகள் யும்னா, மற்றும், 74 வயதாகும் அஃப்சாலின் தாய் ஆகியோர் கொல





லப்பட்டனர். தம்பதியரின் மகன் ஃபயெஸ், படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

சம்பந்தப்பட்டவர்கள் இஸ்லாமியர்கள் என்பதால், அவர்கள் மீதான வெறுப்பு காரணமாக நத்தானியேல் வானைக்கொண்டு வேண்டுமென்றே அவர்கள் மீது மோதியுள்ளார் என பொலிசார் தெரிவித்திருந்தார்கள்.

இந்த வழக்கில், 2024ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது நத்தானியேல் தனக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளார்.

இது குறித்து ஊடகவியலாளர்களிடம் விளக்கிய நத்தானியேலின் சட்டத்தரணியான ஸ்டீபன், இந்த குற்றத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும், சம்பந்தப்பட்ட சமுதாயத்தினரும் அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளதை அறிவோம்.

அவர்களுடைய உணர்வுகளை நாங்கள் மதிக்கிறோம். அதே நேரத்தில், நத்தானியேலுக்கு மேல்முறையீடு செய்வதற்கு சட்டப்படி உரிமை உள்ளது.

அதற்கு நான் உதவி செய்ய இருக்கிறேன். ஆகவே, இரு தரப்பினரும் அதை புரிந்துகொள்வார்கள் என நம்புகிறேன் என ஸ்டீபன் குறிப்பிட்டுள்ளார்.




# குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கும் ஜூலை முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

கனடா தொழிலாளர் நலத்திட்டமான CWB மூலம், குறைந்த வருமானம் கொண்ட தொழிலாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படும்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், முதலாவது கொடுப்பனவு ஜூலை 12ஆம் திகதி வழங்கப்படும்.

அதன் பிறகு, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை, ஒக்டோபர் 11 மற்றும் ஜனவரி 10, 2026 ஆகிய திகதிகளில் கூடுதலாக கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த நலத்திட்டத்தின் பயனாளர்களில் ஏற்கனவே 2024ஆம் ஆண்டில் இதற்காக பதிவு செய்தவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

ஒற்றை நபர்களுக்கான வருடாந்த கொடுப்பனவு அதிகபட்சம் 1,633 டொலர்கள் ஆகும். குடும்பங்களுக்கு இது 2,813 டொலர்கள் வரை வழங்கப்படும். மேலும், மாற்றுத் திறனாளிகள் கூடுதலாக 843 டொலர்கள் பெறக்கூடிய தகுதியும் பெற்றுள்ளனர்.

இந்த நலத்திட்டத்தின் பயனை பெற, நபர் கனடாவில் ஆண்டுபூராக வசித்து இருக்க வேண்டும். கடந்த ஆண்டு டிசம்பர் 31 இற்குள் 19 வயது முடித்திருக்க வேண்டும் என்பதுடன் 2024ஆம் ஆண்டில் குறைந்தது 3,000 டொலர்கள் வரை சம்பாதித்து வேலை செய்திருக்க வேண்டும்.

கொடுப்பனவு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதால், வரம்பை விட அதிக வருமானம் இருப்பின் கொடுப்பனவு குறைக்கப்படலாம் அல்லது முற்றாக நிறுத்தப்படவும் கூடும்.

இந்த கொடுப்பனவை பெறுவோர், தங்களது வருமானத் தகவல்களை முழுமையாக சமர்ப்பித்திருக்கிறார்களா, அதேசமயம் அந்த தகவல்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன், பணம் சரியான நேரத்தில் வரவில்லை என்றால், 10 வேலை நாட்கள் காத்திருந்து, அதன் பிறகு கனடா வருவாய் நிறுவனத்தை (CRA) தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஒன்டாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொரொன்டோ நகரிலிருந்து சுமார் 155 கிலோ மீற்றர் வடகிழக்கில் உள்ள ஸ்டர்ஜன் ஏரியில் இடம்பெற்றுள்ளது.

மூன்று ஆண்கள் பயணித்திருந்த ஒரு கனோவ் (இழுவை படகு) கவிழ்ந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த மூவரில் ஒருவர் மட்டுமே கரைக்கு எட்டியதாகவும், மற்ற இருவர் நீரில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துச் சமயத்தில் படகில் உயிர் காப்புப் பெல்ட்கள் எதுவும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில், ஒன்றாரியோ கடற்படை பிரிவு, கவார்த்தா லேக்ஸ் நகர தீயணைப்பு மற்றும் அவசர சேவை பிரிவுகள் மற்றும் வான் கண்காணிப்பு பிரிவும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மரணங்களைத் தவிர்க்க, படகில் பயணிப்போர், தனிப்பட்ட நீர் மிதப்புப் பெல்ட்கள் அல்லது உயிர் காப்புப் பெல்ட்கள் அணிய வேண்டிய அவசியத்தை ஒன்றாரியோ பொலிஸ் வலியுறுத்தியுள்ளது.




# கொலைச் சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் மீது குற்றச்சாட்டு

கடந்த பெப்ரவரி மாதத்தில் டொராண்டோ மேற்கு பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

நபர் ஒருவரை இந்த பெண் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

44 வயதான மேற்படி பெண் மீது இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் பெப்ரவரி 21ஆம் திகதி அதிகாலை 2:30 மணியளவில் டொவர் கோர்ட் வீதி Dovercourt Road மற்றும் கிரேய் அவன்யு Geary Avenue பகுதிக்கு அருகில் நடைபெற்றதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

கத்தியால் குத்தப்பட்ட நிலையில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில நாள்கள் சிகிச்சையின் பின்னர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

38 வயதான டொராண்டோவைச் சேர்ந்த பவுலோ மோட்டா என்பவரே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்திருந்தார். இச்சம்பவம் தொடர்பாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை 44 வயதான மரியா ரிவெரோ என்ற பெண் கைது செய்யப்பட்டு, இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் கைது

மார்க்ஹாம் பகுதியில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பயிற்றுவிப்பாளர் ஒன்பது ஆண்டுகளாக பாலியல் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யார்க் பிராந்திய பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

2024 மே மாதம் பாதிக்கப்பட்ட ஒருவர் முன்வந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து இந்த வழக்கு விசாரணை தொடங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்கள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2024 ஆம் ஆண்டு வரை தொடர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஆரம்பமான போது பாதிக்கப்பட்டவர் 16 வயதுக்கு கீழ் இருந்தார் என பொலிஸ் கூறியுள்ளது.

58 வயதான மார்க்ஹாம் நகரத்தைச் சேர்ந்த மேற்படி சந்தேகநபர் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் கூடைப்பந்து, டென்னிஸ் மற்றும் கரப்பந்தாட்டப் பயிற்சியாளராக பணியாற்றியுள்ளார்.

மேலும், இதே போன்று பாதிக்கப்பட்ட பிறரும் இருக்கக்கூடும் என பொலிஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

